CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No: 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
Tel: +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
E-mail: cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

வடமாகாணசபைத் தேர்தல் 2013

ஊடக அறிவித்தல் இல 03

செப்டெம்பர் 17, 2013, அதிகாலை 12.45: வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் மற்றும் காரைநகர் தேர்தல் தொகுதி, கோவளம். காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் வேலாயுதம் ஆனைமுகன் (த.தே.கூ) அவர்களின் வீடு அதிகாலை 12.45 அளவில் இனந் தெரியாத ஆட்களின் ஒரு குழுவினால் கல்வீச்சுக்கு உள்ளானது.

முன்னைய இரவு (செப்டெம்பர்16, 2013) 10.30 அளவில் சிவகாமி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற த.தே.கூ இன் தேர்தல் கூட்டத்திலிருந்து திரும்பி வரும்போது தனது வீட்டின் முன்பாக 3 மோட்டார் சைக்கிள்களில் 6 நபர்களை தான் அவதானித்ததாக திரு. ஆனைமுகன் குறிப்பிட்டார். இந்த ஆட்களை நோக்கி அவர் வருவதைக் கண்ட அவர்கள் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தன்னால் ஒரு மோட்டார் சைக்கிளின் பதிவிலக்கத்தை மட்டுமே (VI 6465) குறித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது என்றும், ஆனால் அக்கூட்டத்திலிருந்த பலரை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாக இனங் கண்டு கொண்டதாகவும் திரு.ஆனைமுகன் தெரிவித்தார். திரு.வேலாயுதம் ஆனைமுகன் இச்சம்பவம் பற்றி பொலிஸின் அவசர சேவைப் பிரிவுக்கு அறிவித்ததாகவும் ஆனால் ஒரு உத்தியோகபூர்வ முறைப்பாட்டை மேற்கொள்ளவில்லையெனவும் தெரிவித்தார்.

தே.வ.க.நி ஆல் தொடர்பு கொண்டு சம்பவம் பற்றிக் கேட்ட பொழுது காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரின் வீடு தாக்கப்பட்டது குறித்து தாங்கள் ஒரு முறைப்பாட்டினை பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்திய காரைநகர் பொலிஸ் நிலையம் அது பற்றி புலன்விசாரிப்பதற்கு ஓர் நடமாடும் பொலிஸ் பிரிவை அதிகாலை 1.30 அளவில் சேவையிலிட்டதையும் தெரிவித்தது. முறைப்பாட்டாளர் அந்த வேளையில் முறைப்பாட்டினைத் தருவதற்கு மறுத்ததினால், மறுநாள் பொழுதில் காரைநகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை அளிப்பதற்கு கேட்கப் பட்டதாகவும் ஆனால் அவர் அதனை மேற்கொள்ளவில்லையெனவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். இது ஓர் தேர்தல் தொடர்பான சம்பவமா அல்லது இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தனரா என்பது பற்றி தங்களுக்கு தெரியாது எனவும் பொலிசார் மேலும் குறிப்பிட்டனர்.

கலாநிதி பா.சரவணமுத்து இணை-அழைப்பாளர்	சுனில் ஜயசேகர இணை-அழைப்பாளர்	உதய கலுபதிரண இணை-அழைப்பாளர்